சொல்லி, அவர் பதில் சொல்வதாக இருந்தால், அவர் சொல்ல முடியும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முன்னவர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அதுபற்றி விவரமாகவே பேசியாகிவிட்டது.

திரு. கு. ரமணி : நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு கேட்கவில்லை.

திரு. கு. ரமணி : நான் மாறுபட்ட கருத்தைச் சொல்லவில்லை. ஏற்கெனவே உங்களிடம் கேட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு முறையைப் பின்பற்ற வேண்டும். நீங்கள் வந்து அறையிலே சொல்லுங்கள். நாளைக்கு பார்க்கலாம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : நான் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானம் என்ன ஆயிற்று ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'என்ன ஆயிற்று' என்பதைப் பற்றி அறையிலே வந்து கேளுங்கள். ஒத்தி வைப்புத் தீர்மானம் என்றால், அறையிலே கேளுங்கள்.

3. அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு 1987.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஒரு அறிவிப்பு : 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."